



# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## 'கர்த்தரோடு பவனி' செல்லும் பாக்கியம்!

எந்த சூழ்நிலையிலும் "கர்த்தரை ராஜாவாக வீற்றிருக்கச் செய்து" பவனி செல்வது நமக்குரிய சிலாக்கியம்! அந்த பவனிக்கு ஆயத்தம் உண்டு! அந்த பவனியில் "**ஓசன்னா**" **கீதம்** முழங்க வேண்டும்! எப்படியெனில் பவனியில் **'முன்நடப்போர்'** கர்த்தர் தங்கள் 'கடந்த காலத்தில்' நடப்பித்த அத்தனை செயல்களுக்கும் "அவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்" என்றே ஆர்ப்பரித்திட வேண்டும்! (மாற்கு11:9,10). பின்பு, ராஜாவுக்கு **'பின்நடப்போர்களாய்'** இப்போதும், இன்று சம்பவிக்கும் அனைத்து சூழ்நிலைக்கும் முன் செல்லும் "அவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்" என்னும் 'ஓசன்னா' ஆர்ப்பரித்திட வேண்டும்! ஆ, இதுவே நாம் ஆயத்தம் செய்ய வேண்டிய "கர்த்தருடைய பவனி" (Procession of the Lord). ஆசீர்வதிக்கப்பட்ட இந்த பவனியில் 'ராஜாவாய்' வரும் அவர், நம்மிடம் 'பயப்படாதீர்கள்' என்பார்! சகலமும் நன்மையாய் முடித்து தருவார்! ஆமென்.

*-tr*

ஜுலை 2019

பெட்டகம் 21

பரல்கள் 7



## சத்தியத்தின் கூர்மை மழுங்குவது நியாயமோ?

ஒன்று இருந்தால், மற்றொன்று இல்லை என்பதே மானிடம்! ஆனால், 'கிருபையின்' பெருக்கத்தில் மனதுருக்கம் கொண்ட இயேசுவோ 'சத்தியத்திலும்' கெர்ஜிக்கும் யூதா சிங்கமாய், பக்தி வைராக்கியத்தில் பட்சிக்கும் அக்கினியாய் நிறைந்து வாழ்ந்தார்!

தெய்வ கிருபையை போற்றிப் புகழ்ந்துவிட்டு, தொடர்ந்து பாவத்தில் வாழ்வதற்கே 'தெய்வ கிருபையை' நாடுவோரை, இயேசு இன்றும் மறுக்கிறார்! "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது, நான் உன்னை ஆக்கினைக்குள்ளாய் தீர்ப்பதில்லை....... ஆகிலும், **ஸ்திரீயே, இனி பாவம் செய்யாதே!**" என முழங்கும் இயேசு நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராகவே இருக்கிறார்!! (யோவான்.8:11,12).

தெய்வ கிருபையை, தங்களுக்கேற்றபடி காம விகாரத்திற்கு புரட்டும் 'கொடிய காலம்' இது! பிலாத்துவின் கோர்ட்டில் "சத்தியவானாய்!" நின்றவரை... பொய்யே நிறைந்த அந்த வழக்கு மன்றத்தில் **"சத்தியமா....?"** என வியந்து நோக்கினான் நீதிபதி பிலாத்து!! (யோவான்.18:37,38). தன் வீட்டிலும் சபையிலும் "சத்தியத்திற்கு சாட்சியாய்" வாழும் மாந்தரே "சத்திய ஆவியை" பெற்றவர்கள்!! சத்தியத்திற்கு ஊறு விளைவிக்கும் 'ஒத்த வேஷம்' நிறைந்த இந்நாட்களில்..... சத்தியம் பேசும் சத்தியவான்களே இன்றைய நமது தேவை!! *-Ed*

**'பரலோக பொக்கிஷங்கள்'** வருடசந்தா ரூ.150.00
ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் வீதம் ரூ.125.00 அயல்நாட்டு சந்தா ரூ.900.00

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

வங்கிகணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** IndianBank-Koodal Nagar Branch,
A/c no: **502087685** IFSC Code: **IDIB000K150** (வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாச தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள், 207A- Zaheer Husain Street, Koodal Nagar,
(Thathaneri P.O.), MADURAI - 625 018, S.India. Cell: 9843049935 Ph (O) 0452 - 2662306,
**Email: rathnakumar.t@gmail.com** *தமிழ்வலைதளம்*: **paralogapokkishangal.com, tamil.cfcindia.com**
**You Tube : paralogapokkishangal**

## ‘ஜீவியமே’ ஐக்கியத்தின் ஒளியை பிரகாசிக்கும்!

***நா**ம் எப்போதும் முதலாவதாக ‘ஜீவியத்தையே’ வலியுறுத்த வேண்டும்! அதன் பின்பே, ஐக்கியம்! தேவனுடைய ஜீவன் இல்லாமல் ‘ஐக்கியம்’ என சொல்லிக் கொள்வது ஓர் வஞ்சகமே யாகும். இன்று கிறிஸ்தவத்தில், உலகளாவிய இயக்கங்கள் உருவாகி, சபைகளை ஒன்று சேர்க்க நாடுகிறார்கள். ஆனால், அவர்களின் செயல் **‘தேவனுடைய ஜீவனை அடிப்படையாகக்’** கொண்டதல்ல! படிப்படியாக, இவர்கள் பிற மதஸ்தரையும் தங்களோடு இணைத்துக்கொள்கிறார்கள். சில கால அவகாசத் திற்குப் பிறகு, இவ்வாறாக சம்பவித்து விடுகிறது.*

**யோவான் தன்னுடைய நிருபத்தில் குறிப்பிடும் ஐக்கியம் இப்படிப் பட்டதல்ல. இப்படிப்பட்ட ஐக்கியத்தை, ஜனங்கள் ‘நரகத்தில் கூட’ வைத்துக்கொள்வார்கள்!**

*நாம் எல்லா ஜனங்களிடமும் சிநேகம் கொண்டிருக்க முடியும்! ஆனால் ஐக்கியமோ, நட்பைவிட அதிக ஆழம் கொண்டதாகும். **ஜீவியமும் ஐக்கியமும் எப்போதும் கைகோர்த்து நிற்கும்!** “பிதாவினிடத் திலிருந்து எங்களுக்கு வெளிப்பட்ட நித்தியமாயிருக்கிற அந்த **ஜீவனை** நாங்கள் கண்டோம். அதைக் கண்டு, கேட்டு உங்களுக்கு அறிவிக்கிறோம். இதை நாங்கள் அறிவிப்பதின் நோக்கம், நீங்களும் எங்களோடே **ஐக்கியம்** உள்ளவர்களாக வேண்டும் என்பதுதான்!” எனக் கூறினார் (1யோவான் 1:1-3).*

*“எங்கள் ஐக்கியம் பிதாவோடு இருக்கிறது” என்றார் யோவான் (1யோவான்.1:3). மெய்யான ஐக்கியம், சிலுவை யிலுள்ள இரண்டு குறுக்கு மரங்களைப் போலவே, இரு திசை கொண்டதாகும். **சிலுவையின் மூலமாகவே** நாம் தேவனோடும், ஒருவரோடொருவரும் ஐக்கியப்படுகிறோம். கிறிஸ்துவுக்கும் நமக்கும் நடுவேதான் சிலுவை இருக்கிறது, அந்த சிலுவையில் தான் இயேசு மரித்தார். இவ்வாறாகவே, நம்முடைய ஆண்டவரோடு நாம் ஐக்கியம் பெற்றிருக்கிறோம். அவ்வாறு சிலுவை இல்லாமல், வேறு எந்த விதத்திலும் நாம் தேவனோடு ஐக்கியம் கொள்ள முடியாது. ஏனெனில் நமக்குள், நாமாக*

*நல்லவர்களாய் மாறிட முடியாது. அவ்வாறாகவே நமக்கும் விசுவாசிகளுக்கும் இடையில் சிலுவை இருக்க வேண்டும். அந்த சிலுவையில் நாம் ஒவ்வொருவரும் நம் சுயத்திற்காக மரிக்க வேண்டும். ஒருவருக்கொருவர் ஐக்கியம் விரும்புகிறவர்கள் இதைதான் செய்ய வேண்டும்!*

**‘சிலுவையில் ஏற்படும் இந்த மரணம் இல்லாமல்’ செங்குத்தான உன்னத திசையிலும், குறுக்கு வசமான ஒருவருக்கொருவர் திசையிலும், ஐக்கியம் ஏற்படுவது கூடாத காரியமாகும்.**

*ஆகவே, “சிலுவையே” ஜீவனுக்கும் ஐக்கியத்திற்குமுரிய இரகசியமாகும். சிலுவை இல்லாமல் ‘ஜீவன்’ இல்லை! அதுபோலவே, சிலுவை இல்லாமல் ‘ஐக்கியமும்’ இல்லை!*

*நித்திய காலத்திற்கு முன்பே ‘சிலுவை’ தேவனுடைய மனதில் பதிந்திருந்தது. “உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி” என வாசிக்கிறோம் (வெளி.13:8). தேவன் ஆரம்ப துவக்கமிருந்தே முடிவை அறிந்திருக்கிறார். ஆகவே, திரித்துவமானவர் நித்திய காலம் முதலாய், திரித்துவத்தின் இரண்டாவது ஆள்த்துவம் கொண்டவர் இந்த பூமிக்கு ஓர் மனிதனாய் வந்து, மனுஷருடைய பாவங்களுக்காக சிலுவையில் அறையப்படுவார் என்பதை அறிந்து வைத்திருந்தார். அது, ஆதாம் பாவம் செய்த பிறகு தேவன் எடுத்த தீர்மானம் அல்ல. அது நித்தியமாய் முன்னறியப்பட்டிருந்தது! ஆதாம் பாவம் செய்த போது, ஜீவ விருட்சத்திற்கு முன்பாக ஓர் பட்டயத்தை வைத்தார். அந்த பட்டயம் ‘இயேசுவின் மீது விழுந்து’ அவரை வெட்டியது. இப்போது அந்த பட்டயம், நம் ‘ஆதாமின் ஜீவன்’ மீதும் விழ வேண்டும். இவ்வாறாக,* **நம்முடைய நிலையை “கிறிஸ்துவுடனேகூட சிலுவையில் அறையப்பட்ட” நிலையாக நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்** *(கலா.2:20). நாம் ஜீவ விருட்சத்தில் பங்கடைந்து தேவனோடும், ஒருவரோடொருவரும் ஐக்கியம் கொண்டிருக்க, இந்த நிலைக்கே நாம் வந்திருக்க வேண்டும்!*

*இன்று விசுவாசிகளுக்குள் சம்பவிக்கும் பிரச்சனைகளுக்கு காரணம் என்ன?* **ஆதாமின் ஜீவன்!** *நீங்கள் சபைக்குள் ஆதாமின் ஜீவனைக்கொண்டு வந்தால், அது எப்போதுமே பிரச்சனையைதான் கொண்டு வரும். ஆதாமுக்குரிய உங்களின் அறிவு, காரண யுக்தி, அவனுக்குரிய புத்திசாலித்தனம் ஆகியவற்றை நீங்கள் சபைக்குள் கொண்டு வந்தால், அது எப்போதுமே குழப்பத்தை கொண்டு வரும். ஆதாமின் ஜீவனிலிருந்து உருவாகும் அனைத்து அறிவையும், புத்திசாலித்தனத்தையும் பரிசுத்தாவியின் சுடரொளிப் பட்டயத்திற்கு*

*கீழ்கொண்டு வரவேண்டும்! நீங்கள் ஆதாமின் 'மோசமான ஆடுகளை' மாத்திரமல்லாமல், அவனுக்குரிய 'நல்ல ஆடுகளையும்' கொன்று விடுங்கள்.*

*சவுல் ராஜா, நம் மாம்சத்திற்கு ஒப்பாகிய அமலேக்கியர்களின் கெட்ட ஆடுகளை மாத்திரமே கொன்றான், அவன் நல்ல ஆடுகளைக் கொல்லவில்லை! இந்த கெட்ட ஆடுகள் எதைக் குறிக்கிறது? பொறாமை, கசப்பு, பாலியபாவம், பண ஆசை போன்றவையாகும். நல்ல ஆடுகள் எதைக் குறிக்கிறது? மனுஷீக அறிவு, புத்திகூர்மை, தாலந்துகள், திறமைகள் போன்றவைகளாகும். அதையும் கூட மரணத்திற்கு கொண்டு வாருங்கள்!*

*உங்கள் மனுஷீகத் திறமையோடு இயேசுவிடம் வராமல், வெறும் கையுடையவர்களாகவே வந்து, அவருக்கு ஊழியம் செய்திட 'இயற்கைக்கு அப்பாற்பட்ட வரங்களை' உங்களுக்குத் தரும்படி அவரிடம் கேளுங்கள். அப்போது தேவன் உங்களைப் பரிசுத்தப் படுத்தி, தம்முடைய ஜீவனை உங்களுக்குத் தந்தருளுவார். இதன் பிறகே, உங்கள் சுபாவமான திறமைகள்* **பரிசுத்தாவிக்கு ஊழியர்களாய் மாறி,** *இனி உங்கள் பெலத்தினால் அல்ல, தேவனுடைய பெலனைக் கொண்டு அவருடைய பணியை செய்வீர்கள்! ஆனால், அதற்கு முன்பாக 'உங்களுடைய யாவையும்' பலிபீடத்தில் நீங்கள் வைத்துவிட வேண்டும். நீங்களோ "பிறவியிலிருந்தே தேவன் எனக்கு இந்த திறமைகளைக் கொடுத்திருக்கிறார்" எனக் கூறலாம். தேவனே உங்களுக்கு கொடுத்திருந்தாலும், அதையும் பலிபீடம் தகிப்பதற்கே நீங்கள் கொடுத்துவிட வேண்டும்.* **ஈசாக்கு, தேவனால் ஆபிரகாமுக்கு தரப்பட்ட பரிசு! ஆனால் தேவனோ, ஈசாக்கையும் பலிபீடத்தில் படைக்கும்படி ஆபிரகாமிடம் கூறினார்.**

*இவ்வாறாகவே "தேவன் உங்களுக்குத் தந்த தாலந்துகளுக்கும்" செய்திட வேண்டும். எனவே, உங்கள் புத்திகூர்மை, உங்கள் வாத்திய - இசைக்கும் திறமைகள், மற்றும் உங்கள் சுபாவமான இயற்கை தாலந்துகள் ஆகிய யாவற்றையும் பலிபீடத்தில் வைத்து, அவைகளைத் தேவனுக்கே பலியாக கொடுத்து விடுங்கள். பின்பு, தேவன் அவைகளை மரணத்திலிருந்து உயிரோடு எழுப்பட்டும்! அதன்பின்பே, அவைகளைத் தம்முடைய மகிமைக்கென தேவன் பயன்படுத்துவார். நாம் கர்த்தருக்கு ஊழியம் செய்திட இது ஒன்று மாத்திரமே வழியாகும்!*

நான் பிறக்கும்போதே சில புத்திகூர்மைகளை தேவன் எனக்கு வழங்கியிருந்தார். ஆனால் நானோ, அதை முற்றிலுமாய் பலிபீடத்தில் கிடத்தி, தேவனுக்கே கொடுத்துவிட்டேன். அவரோ அதை எனக்கு 'அபிஷேகத்தோடு' திருப்பிக் கொடுத்து, அவைகளை அவருடைய மகிமைக்காக பயன்படுத்தும்படிச் செய்தார்!

இவ்வாறாகவே நம்முடைய இயற்கையான தாலந்துகளும் திறமைகளும் 'பரிசுத்தமாக்கப்பட்டு' தேவனுடைய பணிக்கு பயனுள்ளதாய் மாற முடியும்.

யோவான் கூறும்போது, **ஐக்கியமே 'சந்தோஷத்தின் நிறைவாய்'** முற்றுப்பெறும் என கூறினார் (1யோவான் 1:4). கிறிஸ்தவ ஜீவியத்தில் 'சந்தோஷம்' மிகப்பெரிய பங்காய் இருக்கிறது. ஏனெனில் 'சந்தோஷமே' பரலோகத்தின் சுவாச மண்டலம்! பரலோகத்தில் யாதொரு சோகமும் இருப்பதில்லை. அங்குள்ள தூதர்கள் ஒருபோதும் அதைரியம் அடைந்ததில்லை. அவர்கள் அனைவரும் ஜீவனின் நிறைவும்! சந்தோஷத்தின் நிறைவும்! கொண்டிருக்கிறார்கள். நாம் தேவனோடு ஐக்கியம் கொண்டிருந்தால் 'அதே சந்தோஷத்தை' நாமும் பெற்றுக்கொள்ள முடியும். பரலோக சூழலை, நம் இருதயங்களில் வைத்திடவே பரிசுத்தாவியானவர் வந்தார். **'நிறைவான சந்தோஷம்' அந்த பரலோக சூழலில் ஒரு பங்காகும்!**

உங்கள் முழு ஜீவியத்தையும் தேவனுக்கு கொடுத்து விட்டால், நீங்கள் துயரமும், கவலையும், மனச்சோர்வும், நீண்ட முகமும் கொண்டவர்களாய் மாறி விடுவீர்கள் என, **சாத்தான்** உங்களிடம் கூறுவான். அவன் கூறியவைகள், துரதிருஷ்டவசமாய் சில கிறிஸ்தவர்களிடம் உண்மையாகவே இருக்கிறது. ஏனெனில், அவர்கள் தங்கள் தோற்றத்தில் இவ்வாறாகவே சோர்வடைந்த கிறிஸ்தவர்களாய் காட்டிக்கொள்கிறார்கள்.

ஒரு நீண்ட முகம் கொண்ட சோகமான கிறிஸ்தவன், யாரோ சிலரைப் பார்த்து "நீங்கள் இந்த கிறிஸ்துவை உங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொள்ள விருப்பம் உண்டா?" எனக் கேட்டார். அந்த நபர், அந்த கிறிஸ்தவனின் முகத்தை ஏறிட்டுப் பார்த்து விட்டு "இல்லை! என் வாழ்க்கையில் ஏற்கெனவே எனக்கு அநேக பிரச்சனைகள் உண்டு!" எனக் கூறி சென்று விட்டார். ஆச்சரியம் மிகுந்த நம் ஆண்டவருக்கு, மகிழ்ச்சியற்ற ஒரு சாட்சி வேதனைக்குரியதேயாகும்! உங்கள் ஜீவியமும் உங்கள் இல்லமும் "கர்த்தருக்குள் சந்தோஷத்தைப்" பிரகாசிக்கவில்லையென்றால், உங்கள் ஜீவியத்தில் ஏதோ தவறு ஏற்பட்டுள்ளது என்றே அர்த்தமாகும். உங்கள் ஜீவியத்தின் எங்கோ ஓரிடத்தில் "தேவனுடைய சித்தத்தை" தொலைத்து விட்டீர்கள்! தாமதமின்றி, உங்கள் ஜீவியத்தை தேவனுக்கு முன்பு சரிப்படுத்துங்கள்! ஐக்கியத்தையும், அது வழங்கும் சந்தோஷத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்!

– சகரியா பூணன்

## புறக்கணிக்கப்பட்ட பாதையில், அவரது கனத்தைப் பெற்றேன்!

*நான் தேவனுக்குள் ஈர்க்கப்படும்படி என்னை முதலாவதாக நடத்திய கத்தோலிக்க தந்தை ஓர் தீவிர ஜெசுட்* (Jesuit) *ஆவார். அவர் ஒருமுறை என்னை சந்தித்தபோது "நான்தானே முதலாவதாக உன்னை இறைவாழ்விற்குள் நடத்தினேன்! அப்படி இருக்க எனக்கு நன்றி கடிதங்கள் இதுவரை நீ ஏன் எழுதவில்லை?" என கேட்டார். அவர் கூறியதை நான் உடனே ஏற்றுக்கொண்டு, அவ்வப்போது என் மனதின் நன்றியை கடிதம் மூலம் தெரிவித்தேன். சிலகாலம் கழித்து, அவர் எனக்கு கடிதம் எழுதினார்: "இனி முதற்கொண்டு நீ எனக்கு கடிதம் எழுத வேண்டாம். உன் கடிதத்தை படித்தபோது 'வேறொரு தீவிரபக்தி' உன்னை பிடித்துக்கொண்டதைப்போல் உணருகிறேன். ஆகவே, நீ இறை அருளுக்குப் பிரியமாய் நடக்கவில்லை என உணருகிறேன்" என* **என்னைப் புறக்கணித்து** *எழுதிவிட்டார்.*

*ஒரு ஜெசுட்டாய் இருந்த கத்தோலிக்க தந்தை, நான் அதிகமாய் மதித்தவர், இவ்வாறு எழுதியது எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது: "ஓ தேவனே, இதுவும் நீர் அனுமதித்தே நடந்துள்ளது. நான் கடந்து வந்த* **சஞ்சலத்தில் குறைவானதை** *இந்த ஜெசுட் அவர்களின் கடிதம் நிறைவாக்கினதைப் போல் காண்கிறேன்! ஓ கர்த்தாவே, அவர்கள் என் ஆரம்ப பக்திக்கு கைக்கொடுத்ததற்காக நன்றி! எனக்காக அவர்கள் ஜெபித்ததற்காக நன்றி! ஆகிலும் இப்போதோ,* **என்னைச் சூழ நின்று அவதூறு பேசும் பல மாந்தர்கள் மத்தியில்,** *ஜெசுட் பரிசுத்தவானும் சேர்ந்து கொண்டதை எண்ணி உள்ளம் வருந்துகிறேன்" என ஜெபித்து, ஆண்டவருக்கு என்னை ஒப்புக்கொடுத்தேன்.*

*இவ்வேளையில் ஆண்டவர் எனக்கு உணர்த்தி "பிறர் மூலம் நிகழ்ந்த அனைத்து துன்பங்களுக்கும் மனம் வருந்தி, உன் உள்ளம் தடுமாறி சாய்வது ஏன்?" என்றே கேட்டார். அவர் என்னை மாயைக்கு விலக்கி, தன்னோடு என்னை ஈர்த்துக் கொள்ளச் செய்யும் கிரியைக்கு என்னை மீண்டுமாய் ஒப்புக்கொடுத்தேன்! என் ஆவிக்குரிய ஜீவியத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே வறட்சியையும், தனிமைக்குத் தள்ளப்பட்ட சூழ்நிலைகளையும் பழகி வந்திருக்கிறேன். அவைகள் என்னில் பெருகப் பெருக நான் எதைக் காட்டிலும் அதிகமாய் தேவனையே தேடி வாழ்ந்திருக்கிறேன்!*

**என் உள்ளத்தில் குடிகொண்டிருந்த 'அவர் எனக்கு எதைத் தருவார்?' என்ற எண்ணங்கள் கொஞ்சம் கொஞ்சமாய் விலகிச் சென்று "கொடுப்பவரையே" பற்றிக்கொண்டேன்!**

“ஒ தேவனே, உம்மையே பற்றிக்கொண்டிருக்கும் என்னை சூழ்நிலையின் நெருக்கங்கள் அதிகமாகி, இரக்கமில்லாமல் என்னை நசுக்குவதைப் போல் காண்கிறேனே!” எனவும் உள்ளம் பதைத்து கூறினேன்! நான் கர்த்தரோடு ஆவியில் இசைந்து நடக்கும்போது பெற்றிடும் அனுபவங்கள், எப்போதும்போல் வெளிப்புறமாய் இல்லாமல் அவரோடு கொண்ட அந்தரங்கத்தில்தான் இருந்தது. முந்திய காலங்களில் நான் சோர்வுற்று தடுமாறுவதை உணரும்போது, வெளிப்பிரகாரமான ஜெப - தவத்தில் ஈடுபட்டு மன சமாதானம் பெற்றுக்கொண்டிருந்தேன். ஆனால் இப்போதோ, அதுபோன்ற நோன்புகளின் மூலம் விடுதலை பெற முடியாதபடி நான் பெலவீனம் அடைந்திருந்தேன். ஆகவே, ஆன்மீக - செயல் முறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளாத நிலையில், **கர்த்தரோ என்னை ‘கடினப்பாதையில்’ நான் அவரோடு சேர்ந்து நடந்து வரவே அனுமதித்தார்.**

என்னை சந்தித்த விரோதங்கள், குரோதங்கள் இன்னும் பல வினோத துன்பங்களை நான் கர்த்தருடைய பார்வைக்கு முன்பாக கொண்டு வந்து நிறுத்திட மாத்திரமே செய்தேன். இச்சமயத்தில்தான், எனக்காக நியமிக்கப்பட்டிருந்த **கண்காணியானவர்கூட** என்னை அதிகமாய் புறக்கணித்தார். அவரும் என்னை புறக்கணித்த செயல், என் உள்ளத்தின் ஆழத்தில் ‘சிறுமையை’ கொண்டு வந்தது. அதுமாத்திர மல்ல என் **சொந்த சகோதரன்கூட,** எனக்கு விரோதம் செய்த, மார்க்க சம்மந்தமான தலைவர்களோடு கைக்கோர்த்துக் கொண்டான். அவனோ, மார்க்க சம்மந்தமான அந்த கத்தோலிக்க ஜெசுட்டு களையோ அல்லது கண்காணியானவர்களையோ சிறிதுகூட முன்பின் அறிந்தவனல்ல! இருப்பினும், என் சகோதரனும் அவர்களோடு சேர்ந்து கொண்ட செயல் எனக்கு நூதனமாய் தோன்றியது. “தள்ளப்பட்ட கல்” அல்லது புறக்கணிக்கப்பட்ட வாழ்க்கையை இயேசு சந்தித்து, அதுவே அவரை ‘மூலைக்கல்லாக’ மாற்றியதை தியானித்து ஆச்சரியப்பட்டேன். அவர் சந்தித்த அதே பாக்கியம் ‘எனக்கும் கிடைத்ததாகவே’ உள்ளம் ஆறுதல் அடைந்தேன்!

இப்போது காரியம் எனக்கு மிக தெளிவாகி விட்டது! **இவர்கள் யாவரையும் கர்த்தரே நடத்தி,** அவர்களும் அவர் நடத்திய பங்கை செம்மையாய் நிறைவேற்றி....“முடிவில் என்னையோ மிகச்சிறந்த உன்னத ஸ்தானத்திற்கு நடத்தி! **கிறிஸ்துவின் கனத்தை** எனக்கு தந்து மகிழ்ந்தார்!” என்ற உண்மையைக் கண்டு, புறக்கணிக்கப்பட்ட அந்த சூழ்நிலைகளை என் மனப்பூர்வமாய் விசுவாசித்து ஏற்றுக் கொண்டேன்!

– மேடம் குயான்

## ‘முதிர்ச்சியடையும் வளர்ச்சியே’ நமக்கு வேண்டும்!

**தே**வனுடைய வார்த்தையை நன்கு புரிந்துகொண்டு, பரிசுத்தாவியின் உதவியோடு அந்த வசனத்திற்கு ‘கீழ்ப்படிவதே’ ஆவிக்குரிய பூரணத்தின் வழியாகும். இங்கு நாம் கவனம் கொள்ள வேண்டியது என்னவென்றால், கீழ்ப்படிவதற்கு, நமக்குப் பிடித்தமான சில வசனங்களை வைத்துக்கொண்டு, மற்ற வசனங்களைத் தள்ளி விடுவதேயாகும்.

> ஒன்றை மனதில் வைத்துக்கொள்ளுங்கள்: “முழு வேதாகமத்திற்கு குறைவாக, நீங்கள் வைத்திருக்கும் யாதொன்றும், உங்களை முழு கிறிஸ்தவனாய் மாற்ற இயலாது!”

முழு கிறிஸ்தவனாய் நிலைத்திருக்க விரும்பும் நீங்கள், உங்கள் சிந்தைகளை எப்போதும் ‘தூய்மை நிறைந்த பரிசுத்த ஸ்தலமாய்’ வைத்திருங்கள். நம் தேவனை பொருத்தமட்டில் ‘நம் சிந்தைகளே’ எல்லாமுமாயிருக்கிறது. நாம் வாழும் மெய்யான இடம் “பரிசுத்த ஸ்தலத்திற்குள் அலங்கரிக்கப்பட்டு வைத்திருக்கும் நமது சிந்தைகளே யாகும்!”. நம்முடைய சிந்தைகள், கிறிஸ்துவின் இரத்தத்தால் சுத்திகரித்து வைக்கப்பட்டிருந்தால், நாம் ஒரு சுத்தமான அறையில் வாழுகிறோம் என்பது பொருளாகும். அப்படியொரு உள்ளான சிந்தை வாழ்வை நீங்கள் பெற்றிருந்தால், உங்கள் உடம்பெல்லாம் கருப்பு - கிரீஸ் தடவி இருந்தாலும் தேவனுக்கு அது ஒரு பொருட்டல்ல! உங்கள் சிந்தைகளே, உங்கள் மனநிலையையும்! உங்கள் இருதயத்தின் வெப்ப- தட்பத்தையும்! தீர்மானிக்கிறது. தேவன், உங்கள் சிந்தைகளை வைத்துதான் உங்களைப் பார்க்கிறார். அங்கு சமாதானத்தின் சிந்தை, இரக்கத்தின் சிந்தை, தயவான சிந்தை, அன்புள்ள சிந்தை, தேவனைப் பற்றிய சிந்தை, தேவ குமாரனைப் பற்றிய சிந்தை, சுத்தமுள்ளவைகள், நல்லவைகள், மேலானவைகள் ஆகிய சிந்தைகளே நிறைந்திருக்க வேண்டும்! நீங்கள் பரிசுத்தாவியின் அபிஷேகத்தால் நிறைந்து வாழ்பவர்களாயிருந்தால், ஆவியின் இந்த நற்குணங்கள் உங்கள் சிந்தை களைப் பற்றிக்கொண்டு கனிகொடுத்திருக்கும். **இதுபோன்ற நல் – சிந்தை கொண்டவர்கள், தங்கள் சிந்தைகள் வனாந்திர வெறுமைக்கு சென்று விடாதபடியும்,** அசுத்த மிருகங்கள் ‘சிந்தைக்குள்’ வந்து உலாவ அனுமதிக்காதபடியும், வௌவால், கோட்டான்கள் போன்ற தீய பறவைகள் உள்ளே வந்து பறக்காதபடியும், தங்கள் சிந்தைகளை காத்து நடக்க வேண்டும்! எப்படியாகிலும் ஓர் சுத்த இருதயம் உங்களுக்கு வேண்டும்!

இரண்டு விதமான ஜீவியம் மானிடர்களுக்கு உண்டு. ஒன்று விடாய்த்துப்போன நிலம்! மற்றொன்று, உழப்பட்ட நிலம்! உழப்பட்ட நிலத்தில் பல அற்புதங்கள் சம்பவிக்கும். தேவன் அனுமதிக்கும் துன்பங்களை, நம்முடைய இருதயத்தை உழுவதற்கு அனுமதிக்க வேண்டும்! அவ்வாறு உழப்படுவதற்கு அனுமதிக்கப் பட்ட 'முள்ளில்' பவுல் மிகச் சிறந்த பக்தனாய் ஒளி வீசினார்!

*நம்மில் ஏன் சிலர் மாத்திரமே தங்கள் ஜீவிய பாதையில் தேவனை கண்டுபிடிக்கிறார்கள்? மற்றவர்கள் ஏன் கண்டுபிடிப்பதில்லை? தேவன் தம்முடையவர்களிடத்தில் யாதொரு பாரபட்சமும் காட்டுகிறவ ரல்லவே? ஆகவே வித்தியாசம் தேவனிடத்தில் இல்லை, நம்மிடத்தில் மாத்திரமே உள்ளது. சிறந்த பரிசுத்தவான்களிடத்தில் நான் கண்ட வலிமையான உண்மையை உங்களுக்கும் பகிர்ந்து கொள்ள விரும்பு கிறேன். அதுஎன்னவெனில், "தேவன் அனுப்பும் சூழ்நிலைகளை மனதார ஏற்றுக்கொள்ளும் அவர்களின் ஆவிக்குரிய விழிப்பேயாகும்". இதுவே சராசரியான கிறிஸ்தவர்களைக் காட்டிலும், இவர்களை மேன்மைப்படுத்துகிறது!*

இவர்கள், தங்கள் இருதயத்தின் ஆழத்தில் ஓர் உணர்வடையும்போது, அதைக் குறித்து ஏதாகிலும் சில பிரதிபலிப்பை ஏற்படுத்துவார்கள். இவர்களின் ஜீவகாலமெல்லாம் இந்த ஆவிக்குரிய பிரதிபலிப்பு அவர்களிடம் இருந்து கொண்டே இருக்கும்.

*ஆவிக்குரிய விழிப்பு தன்மை, அந்தந்த நபரைச் சார்ந்ததாகும். ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளும் ஆர்வத்தைக் கொண்டே இந்த விழிப்புத் தன்மை ஒருவனிடம் பெருகி வரும்! ஏற்றுக்கொள்ள தயங்கும் மந்த நிலைமை, அவர்களுடைய ஆவிக்குரிய நிலையை கொஞ்சம் கொஞ்சமாய் அழித்துக்கொண்டே போகும். ஒருவனைத் தேடிவரும் ஆவிக்குரிய தன்மை, அவன் ஏற்றுக்கொள்ளும் விதத்தில்தான் அவனிடத்தில் தங்கும். ஆவிக்குரிய மென்மையான நற்குணங்கள், ஒருவனை பலவந்தமாய் ஒருபோதும் ஆட்கொள்ளுவ தில்லை. அது, தேவனிடமிருந்து புறப்படும் நல்ல ஈவாகவே வருகிறது! சிறந்த ஆவிக்குரிய உணர்வு கொண்டவன், அதை மனதார ஏற்றுக் கொண்டு அந்த உணர்வின் பண்பில் வளருவான்!*

*இதற்கு மாறாக, இன்று நிலவி வரும்* **மந்தமான– சுவிசேஷ நாகரீக சூழ்நிலை** *உங்களின் ஆவிக்குரிய ஜீவியத்தை அழிக்க வரும் சத்துவம் என அறிந்து கொள்ளுங்கள். இன்று காணும் எலக்ரானிக் - மிஷின் நிலையை, தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்திலும் பழகிக் கொள்ள அநேகர் முயற்சிக்கிறார்கள். அவர்கள் தியானிக்கும் வேத வாக்கியங்கள் எத்தனை? அவர்களின் தியான நேரம் எவ்வளவு? இவை*

*அனைத்தையும் எலக்ட்ரானிக்-மிஷின் வேகத்தில் செய்யலாம் என முயற்சிக்கிறார்கள். இதனால் ஏற்படும் விளைவு என்ன? அவர்களின் உள்ளான ஆவிக்குரிய நிலைமை 'திவாலாகி' விட்டன* (Bankyuptcy). *இவர்களிடம் ஒன்றும் இல்லாத, திவாலாகி விட்ட நிலையை பூர்த்தி செய்வதற்கே ஞாயிற்றுக்கிழமை சபை கூட்டங்களுக்குச் செல்கிறார்கள்! ஸ்பெஷல் கூட்டங்கள் செல்கிறார்கள்! கிறிஸ்தவ கான்பரன்ஸ் கூட்டங்கள் செல்கிறார்கள்! இதுவே இன்றைய பரிதாப கிறிஸ்தவ ஜனங்களின் நிலையாயிருக்கிறது.*

**இதற்கு விடை என்ன? ஒரு மனிதன் கிறிஸ்துவினிடத்தில் தனியாய் வந்து, அவனுக்குள் தனிப்பட்ட விதத்தில் மனந்திரும்புதல் நிகழ வேண்டும்! அவனுக்குள் விசுவாசம் வளர வேண்டும்! அப்போது மாத்திரமே, அவன் தேவனுடைய குடும்பத்தில் பிறந்தவன் என்ற சிலாக்கியத்தைப் பெறுவான்!**

*சபையும் "தேவனுடைய வீடு என்றே" அழைக்கப்படுகிறது. இளமையான தன் கிறிஸ்தவ வளர்ச்சியின் காலத்தை ஒருவன் சபையில் வைத்தே துவங்க வேண்டும். ஒரு பிள்ளை, தனியாயிருந்து, முதிர்ச்சி பெற்ற மனிதனாய் மாற முடியாது! அதுபோலவே சபையிலிருந்து தன்னை விலக்கி வைத்து வாழும் எந்த கிறிஸ்தவனும் வளர்ச்சியடைய இயலாது! அதுபோன்றவர்களின் ஆத்துமாக்களுக்கு காயங்களும், விபத்துக்களும் சம்பவிக்கும்போது, அவைகளில் தேறி, மேற்கொண்டு, ஆவிக்குரிய பூரண புருஷனாய் முதிர்ச்சி அடைவது சாத்தியமில்லை!*

*– A.W. டோசர்*

---

## 'தூற்றும் தீமைக்கு' தூர நில்லுங்கள்!

***கி****றிஸ்து பிறப்பதற்கு முன்பாக வாழ்ந்த ஒரு புகழ்பெற்ற கிரேக்க ஞானிதான் சாக்ரடீஸ். ஓர் சுத்த மனசாட்சியை காத்துக் கொள்வதில், இயேசுவின் போதனைக்கு ஒப்பாகவே வாழ்ந்தவர்! குறிப்பாக, பிறரைப் பற்றிக்கூறும் 'அவதூறுகளை'* **(Gossip)** *தன் நெஞ்சத்தில் ஏற்றுக் கொள்ள மறுத்து, தூய்மையான மனசாட்சியில் வாழ்ந்து, சிறந்து விளங்கியவர். சாக்ரடீசுக்கு 'புளூட்டோ' என்ற பெயருடைய நண்பர் இருந்தார். அவரும் ஓர் சிறந்த தத்துவ மேதையாகவே மக்களால் மதிக்கப்பட்டு வந்தார். புளூட்டோவிடம் கொண்டிருந்த நட்பை, சாக்ரடீஸ் சிறந்த முறையில் பாதுகாத்து கொண்டிருந்தது மாத்திரமல்ல, அந்த நட்பு அவருக்குள் வளர்ந்தும் வந்தது!*

**நட்பை பாதுகாத்துக் கொள்வதற்கு, அவர் கடைப்பிடித்த தீவிர செயல் என்ன தெரியுமா? "அவதூறு கேட்க மறுத்த" அவரது செயல், நம் யாவருக்கும் நல்லதொரு மாதிரியாய் விளங்குகிறது!**

ஒருநாள், சாக்ரடீசுக்கு அறிமுகமான ஒருவர், சாக்ரடீசை சந்தித்து "சாக்ரடீஸ், உன்னுடைய நெருங்கிய நண்பனைக் குறித்து 'சேதி' ஒன்று கேட்டேன்?" எனக் கூறியபோது .....

"சற்றுப் பொருங்கள்!" எனக் கூறிய சாக்ரடீஸ், என் நண்பனைக் குறித்து நீங்கள் யாதொன்று சொல்வதற்கு முன்பாக "**மூன்று வடிகட்டி சோதனை**" உங்களிடம் வைத்திட விரும்புகிறேன் எனக் கூறினார்.

அதற்கு அந்த நெருங்கியவர் "என்ன, மூன்று வடிகட்டி சோதனையா?" என வியந்து கேட்டார்!

'ஆம்' என பதிலுரைத்த சாக்ரடீஸ் "என் நண்பனைக் குறித்து நீங்கள் கூறிடும் 'சேதி' இந்த 'மூன்று வடிகட்டி சோதனையில்' கடந்து வருவது **என் சுத்த மனசாட்சிக்கு** நல்லதாகவே நான் கருதுகிறேன்:

"ஆகவே, **வடிகட்டியின் முதல் சோதனை 'உண்மை' (Truth)** என்பதே ஆகும். என் நண்பனைப் பற்றி நீங்கள் கூறும் சேதி முற்றிலும் உண்மையானதுதானா?" எனக் கேட்டார்.

"ம்... அப்படிச் சொல்ல இயலாது! ஏனெனில் 'இந்த சேதியை' எனக்கு வேறொருவர்தான் கூறினார்...." எனக்கூற,

உடனே சாக்ரடீஸ், "புரிந்து விட்டது... நீங்கள் சொல்லப்போகும் சேதி உண்மையா? இல்லையா? என உங்களுக்கே தெரியவில்லை!" எனக் கூறினார்.

"சரி போகட்டும்... **வடிகட்டியின் இரண்டாவது சோதனை 'நன்மை' (Goodness)** என்பதே ஆகும். என் நண்பனைப் பற்றி நீங்கள் கூறும் சேதி நன்மையான சேதியா?" எனக் கேட்டார்.

"ம்..... அப்படிச் சொல்லவும் இயலாது, கொஞ்சம் நன்மைக்கு புறம்பானதுதான்...." எனக்கூற,

உடனே சாக்ரடீஸ் "புரிந்து விட்டது, நீங்கள் சொல்லப் போகும் சேதி என் நண்பனை பற்றிய தீமையான சேதிதான்! அதுவும் கூட, அது உண்மையானதுதானா என்பதும் உங்களுக்கு தெரியவில்லை" எனக்கூறி....

தொடர்ந்து சாக்ரடீஸ் "சரிபோகட்டும்..... எனது கடைசி **வடிகட்டியின் மூன்றாவது சோதனை 'பயனுள்ளது' (Usefulness)** என்பதே ஆகும். என் நண்பனைப் பற்றி நீங்கள் கூறப்போகும் சேதி, எனக்கு எவ்விதத்திலும் பயனுள்ளதாய் இருக்குமா?" எனக் கேட்டார்!

அவர் சிரித்துக் கொண்டே "அப்படியும் சொல்ல இயலாது...." என்று கூறவே.....

சாக்ரடீஸ் தனது முடிவுரைக்கு வந்து விட்டார், "அன்பானவரே நீங்கள் சொல்ல வந்த சேதி உண்மையானதாகவும் தெரியவில்லை! நன்மையானதாகவும் தெரியவில்லை! குறைந்தது பயனுள்ளதாய் இருக்கிறதா..... அதுவும் இல்லை! பின் ஏன் எனக்கு என் நண்பனைக் குறித்த 'அவதூறான' சேதியை சொல்ல வேண்டும்?" என முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்.

**இ**வ்வித உத்தம குணம் கொண்ட சாக்ரடீஸிடம், அவரது நண்பனாகிய புளூட்டோவை பற்றி அநேகர் கூறவந்த அவதூறை, கடைசிவரை அவர் கேட்கவே இல்லை! அந்த அவதூறுதான் என்ன? "புளூட்டோ தன் மனைவியை, வீட்டில் வைத்து அடித்து விட்டார்" என்ற சேதியே ஆகும். சாக்ரடீஸ், தன் நண்பன் புளூட்டோவின் நட்பை, 'கிறிஸ்துவுக்கு முன்பாகவே' சேதமில்லாமல் பாதுகாத்து கொண்ட இரகசியமாகிய "**மூன்று வடிகட்டி சோதனையை**" கிறிஸ்தவர்களாகிய நாமும் கைக்கொள்வது, உத்தம நட்பிற்கு சிறந்த இலக்கணமன்றோ!

நட்பிற்கு சேதமில்லாமல் இவ்வித உத்தமத்தை காத்துக் கொண்ட **சாக்ரடீஸிற்கு நடந்தது என்ன தெரியுமா?** இந்த சாக்ரடீஸ், "கிரேக்க தெய்வத்தை தூஷிக்கிறார் என்றும், இளைஞர்களை புரட்சியாளர் களாய் மாற்றுகிறார் என்றும்" பொய்யாய் குற்றம் சாட்டப்பட்டு, அந்த **பொய் நிரூபிக்கப்படாமலே மரண தண்டனை பெற்றார்!** அந்நாட்களின் வழக்கப்படி, சிறைச்சாலையில், அவரே குடிக்கும்படி "விஷக் குப்பியை" கொடுத்து, குடிக்கும்படி செய்தனர்! அந்த தண்டனையைக் காண கூடிவந்திருந்த மக்கள் மன்றத்திற்கு முன்பாக.... "இன்று, என்னுடைய குற்றங்கள் எதுவும் என்னை தண்டிக்கவில்லை. மாறாக வதந்தியும், என்னைப் பற்றிய அவதூறுகளும்.... இவைகளை ஒருவருக்கொருவர் காதுகளில் கிசுகிசுத்து, திரள் கூட்டமாய் கைகோர்த்து குற்றம் சாட்டியிருக்கிறார்கள். குற்றம் இல்லாத நான்.... அவதூறுகளால் குற்றவாளியாகி, விஷம் அருந்தி மரிக்கப் போகிறேன்!" என்றார்.

தூற்றித்திரியும் தீய பண்பைக் குறித்து சாக்ரடீஸ் கூறிய வாசகங்களை நாம் யாவரும் மனதில் வைப்பது நல்லது.... அவர் கூறினார் "தூற்றுதல் ஓர் கொடிய தீய செயல்! அதைத் தூக்கி, தோளில் வைத்துக் கொள்வது எளிது **(light weight)**, ஆனால், அதைத் தூக்கி சுமப்பது சொல்லொண்ணா பாரம் கொண்டது **(heavy)**! பின்பு அதைக் கீழே இறக்கி விட்டு விடுவதோ.... மிக மிக கடினம் **(hard)**!"

உங்கள் வாழ்வில் நலமே உண்டாயிருக்க, "தூற்றும் தீமைக்கு" தூர விலகி நில்லுங்கள்!

– சாக்ரடீஸின் உண்மைகள்

## புத்திமதியா? பொறுங்கள், கடைப்பிடித்து சொல்லுங்கள்!

*சில வருடங்களுக்கு முன்பு வங்காள மாநிலத்திலுள்ள ஒரு கிராமத்தில், வேத நெறியில் வாழ்ந்த பக்தியுள்ள சகோதரன் ஒருவர் இருந்தார். ஒருசமயம், ஒரு தாய் தன் குழந்தையைக் கூட்டிக்கொண்டு அவரிடத்தில் வந்தாள். இவ்வாறு ஆலோசனை கேட்கும்படி, அநேகர் அவரிடம் வருவதுண்டு. இந்த தாய் கேட்ட ஆலோசனை உதவி என்னவென்றால்: தன் குழந்தை அதிகமாக இனிப்பு பதார்த்தங் களையே எப்போதும் வாங்கிச் சாப்பிடுகின்றது எனவும், அந்த கெட்ட பழக்கத்தைக் கைவிட தன் குழந்தைக்கு அந்த சகோதரன்* **புத்திமதி** *சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொண்டாள். அந்த சகோதரன், குழந்தையை அன்புடன் உற்று நோக்கினார். பின்பு, அந்த தாயைப் பார்த்து குழந்தையை மறுநாள் கூட்டிக்கொண்டு வரும்படியாகச் சொல்லிவிட்டு அமைதியாய் இருந்து விட்டார்.*

*அவருடைய வார்த்தையின்படியே அந்த தாய், மறுநாள் குழந்தையைத் தன்னுடன் கூட்டி வந்தாள். அந்த நாளிலும், அவர் அந்தக் குழந்தையை ஒருமுறை அன்புடன் பார்த்துவிட்டு, தாயைப் பார்த்து, அடுத்த நாள் குழந்தையை கூட்டிவரும்படி தயவாய் கூறி, திரும்பவும் அமைதியாய் இருந்துவிட்டார். இப்படியே சில தினங்கள் நடந்த பின்னர், ஒருநாள் அந்தச் சகோதரன் குழந்தையைப் பார்த்து "குழந்தாய், இனிமேல் நீ அதிகமாக இனிப்புப் பண்டங்களைச் சாப்பிடக் கூடாது. அப்படிச் சாப்பிட்டால், உன் வயிற்றில் கிருமிகள் உண்டாகி, உன் சரீரத்திற்குக் கேடுண்டாகும்! நீயும் மிகவும் கஷ்டப்படுவாய்" என அன்புடன் கூறினார். குழந்தையும் அதற்கு முழு மனதுடன் இணங்கினது!*

*தனது மகனை அழைத்துக்கொண்டு வீட்டிற்குப் புறப்படும் சமயம், அந்தத் தாய், சகோதரனைப் பார்த்து, "அன்பார்ந்த ஐயா, இன்று நீங்கள்* **குழந்தையிடம் சொன்ன புத்திமதியை** *முதல் நாளிலேயே சொல்லியிருக்கலாமே! இத்தனை நாளும் நான் வீணாக அலைந்திருக்கத் தேவையில்லையே!" என்று கேட்டாள். கொஞ்ச நேர மௌனத்திற்குப் பின்னர் அந்த பக்தியுள்ள சகோதரன் பேசத் தொடங்கி, "தாயே, நீ சொல்லுவதில் தவறு எதுவுமில்லை. இந்த இடைப்பட்ட நாட்களில் எனக்குள் பெரியதொரு போர் நடந்தது. நடந்த அந்த போர்* **'என் மனதை நான் அடக்குவதாய்' இருந்தது!** *போரில் ஜெயம் பெறுவதற்கு இத்தனை நாட்கள் ஆகிவிட்டது!! அந்தப் போர் என்னவெனில், உன் குழந்தையைப்போலவே நானும் கூட இது நாள்வரை அதிகமான*

*இனிப்புகளை விரும்பி சாப்பிட்டு வந்தேன். உனது குழந்தைக்கு இனிப்பு சாப்பிடக்கூடாது என்று நான்* **போதனை சொல்வதற்கு முன்னர், என்னையே அந்தப் பழக்கத்திலிருந்து விடுவித்துக் கொள்ள** *நான் போராடி வெற்றிகொள்ள வேண்டியது எனக்கு அவசியமாயிற்று. உன் குழந்தை இனி ஜென்மத்திற்கும் கண்டிப்பாய் அதிக இனிப்பு சாப்பிடாது!" என்று கூறி அனுப்பி வைத்தார்! (அப்.1:2).*

*– Selected*

---

## 'அன்பற்ற தன்மை' ஓர் நாளில் வெடித்துவிடும்!

***யா****ரோ சிலரிடம் கொண்டுள்ள அன்பற்ற மனப்பாங்கை நம்முடைய வார்த்தையினாலோ, அல்லது கிரியையினாலோ வெளிப்படுத்திவிடாதபடி இருக்க நாம் மிகுந்த ஜாக்கிரதை கொண்டிருக்கலாம்! ஆனால், ஆவிக்குரிய வலிமை யாதெனில், நம்மிடத்தில் எந்த வார்த்தையும் கிரியையும் வெளிப்படாதிருந்தும், அவை நாளாவட்டத்தில் பற்றிப் படர்ந்து விடும்!!*

**நம்முடைய இருதயத்திற்குள் உருவான ஓர் சிறிய அன்பற்ற தன்மைகூட, ஈரத்துணியில் கலர்சாயத்தின் கறை மெதுவாய் இறங்குவது போல் படர்ந்து, ஓர் எதிர்பாராத பெலஹீனமான நிகழ்ச்சியின் தருணத்தில் 'குறிப்பிட்ட' அந்த ஆத்துமாவைத் தாக்கி விடும்! இதுபோன்ற சேதம், கிறிஸ்துவின் தூய சரீரத்திற்கு விளைவித்திடும் தீங்காய் மாறிவிடும்!**

*அன்பின் பாதையில் நடந்து செல்வதென்பது ஒருபோதும் ஓர் எளிய வழியே அல்ல! நாம் இவ்வழி செல்ல மனப்பூர்வமாய் தீர்மானித்தவர்களாய் இருந்தால், பாடுபடுவதற்கும் ஆயத்தமாய் இருக்க வேண்டும். ஏனெனில் நமக்கு முன்சென்ற நம்முடைய குருவாகிய கிறிஸ்துவும் இந்த அன்பின் வழியாகவே கடந்து சென்றார். நம் சூழ்நிலைகள், நம் மனுஷீக அன்பையெல்லாம் மாயமாய் மறைந்து போகச் செய்து,* **எரிக்கும் வெயிலில்** *(அன்பற்ற சூழலில்) வாடி வதங்கிப் போகும் புல்லைப் போலன்றோ நாம் உணர்கின்றோம்.*

*உதாரணமாய், ஊழியம் செய்யும்படி தேவன் நமக்குத் தந்த ஸ்தலத்தில் உள்ள ஆத்துமாக்களை, தேவனுடைய பிள்ளைகளாகும்படி வழிநடத்தி.... அவர்களும் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்! எப்படியாவது அவர்களும் சபை ஊழியத்திற்கு பயன்பட்டு, அநேகரை ஆசீர்வதிப்பதற்கு தகுதியடைவார்கள் என்றும் நம்பிக்கை கொள்கிறோம்! இவ்வித ஊழியத்தில், கடுமையான பிரயாசங்கள் எடுத்து, நம் சரீர சுகத்தைக்கூட இழந்திருக்கிறோம்! ஆனால், நாம் பாடுபட்டு உழைத்த ஜனங்களோ, எதிர்பார்த்த பலனைத் தராமல்,*

*நம் நம்பிக்கை யாவையும் கவிழ்த்துப் போடுகிறார்கள்! இவ்வித சூழ்நிலை களில்தான் 'பெரும் சவாலை' நாம் சந்திக்கிறோம்.* **இந்நிலையில், ஆத்துமாவிற்காக உழைத்திடத் தூண்டிய கல்வாரி அன்பிலிருந்து நாம் விலகிச் செல்வது நியாயமாகுமோ?** *அல்லது, கிறிஸ்துவின் கனிவான அன்பில் நிலைத்திருந்து, "பிதாவே இவர்களை மன்னியும்.... தாங்கள் செய்வது இன்னதென்று அவர்கள் அறியாதிருக்கிறார்களே!" என தொடர்ந்து நாம் ஜெபித்திடக் கூடுமோ? கூடும்.... நிச்சயமாய் கூடும்! ஏனெனில், கல்வாரி அன்பு எக்காலத்தும் ஒழிவதில்லை!*

**காரிருளான இவ்வேளையில், "தேவரீர் என் இருதயத்தில் தோன்றும் எல்லாத் தடைகளையும் அகற்றிவிட்டு உம்முடைய அன்பை எனக்குள் ஊற்றிவிடும்!" என கதறும் நம் உள்ளத்தில், கல்வாரி நாதன், தம் அன்பை நிச்சயமாய் ஊற்றுவார்!**

*இவ்வித கதறலின் கூக்குரலுக்கு காத்திருக்கும் தேவன், நாம் பெற்றிருக்கும்* **"கல்வாரி அன்பின் ஏக்கத்திற்காய்"** *மனம் மகிழ்வார்! ஏனெனில் 'எனக்கும் தேவ அன்பு வேண்டும்!' என, ஏனோதானோ என்று ஜெபிக்கிறவர்களிடத்தில் தேவன் அக்கறை காட்டுவதில்லை. தன் இருதயத்தின் முழுமையையும் முன்வைத்து தேவனைத் தேடுகிறவர் களையே, அவர் வாஞ்சித்து நோக்குகிறார்!*

*ஆம், திறந்து வைக்கப்பட்ட ஒரு அறையில், சூரியஒளி எவ்வாறு பாய்ந்து நிரப்புகிறதோ, அதேபோலவே நம்முடைய இருதயத்தை தம்முடைய அன்பினால் நிறைத்து விடுவதற்கு தேவன் மகாவிருப்பம் கொண்டுள்ளார். நாம் சுவாசிக்கும் காற்று நம்மைச் சுற்றிலும் சூழ்ந்து நெருக்கி இருப்பதைப் போலவே, தன்னை சுவாசிக்க விரும்பு வோருக்கு 'தேவ அன்பு' அவர்களைச் சூழ்ந்து நெருக்கி நிற்கிறது! அந்த அன்பு உள்ளே பிரவேசிக்க முடியாமல் அரை - குறையாய் கதவைத் திறந்து தடை செய்யாதிருங்கள்! நீங்கள் மாத்திரம் தடை களை அகற்றி,* **முழு இருதய கதவையும் திறந்துவிட்டால்,** *தேவ அன்பின் வெள்ளம் உங்கள் உள்ளம் புளகாங்கிதம் அடையும்படியாய் நிறைத்துவிடுவதைக் காண்பீர்கள்!!*

**நம்மை கிறிஸ்துவுக்குள் ஊன்றக் கட்டுவதற்கு தெய்வீக அன்பைக் காட்டிலும் வலிமையான வல்லமை வேறு எதுவுமே இல்லை எனலாம். இந்த இரகசியத்தை சாத்தான் அறிந்திருக்கிறபடியால்தான், 'அன்பில் சேதம் உண்டாகும்படி' நம்மைத் தாக்கி, வெறும் "சத்தமிடுகிற வெண்கலம் போலவும் ஓசையிடுகிற கைத்தாளம் போலவும்" செய்திட முயற்சிக்கிறான்! (1கொரி.13:1).**

*இந்த அன்பின் ஜீவியத்தை வாழ்ந்துவிடும்படி தீராத வாஞ்சை கொண்டவர்கள் மாத்திரமே, பரிசுத்த ஆவியானவர் தங்களை*

*அன்பினால் நிறைக்கும்படியாய் 'எப்போதும்' தங்கள் இருதயத்தைக் கழுவி சுத்திகரித்துக்கொள்ள ஜாக்கிரதையாய் இருக்கிறார்கள். தேவனும் இவர்களின் 'இதய கூக்குரலைக்கேட்டு' அவர்களை மீண்டும் மீண்டுமாய் தன் அன்பினால் நிறைத்துக்கொண்டே இருக்கிறார்!*

*நம்முடைய ஆண்டவராகிய இயேசுவை,* **இந்த தெய்வீக அன்பே** *சம்பூர்ணமாய் நிறைத்து, அவரை சிலுவைக்கு நடத்திச் சென்றது! ஆம், இந்த தெய்வ அன்பே நம் இரட்சகரை சிலுவையில் தொங்கும்படி செய்தது! அதே அன்பு, நம் உள்ளத்தையும் நிரப்பி விட்டால்....! நம்முடைய சகோதரர்களுக்காக ஜீவனையே கொடுப்பதற்கும் ஆயத்தமான, மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையாய் அந்த அன்பு நம்மை மாற்றிவிடும்!!*

*– ஏமி கார்மைக்கேல்*

---

## துன்பத்தில் 'மங்களம்' கொண்டவனே கிறிஸ்தவன்!

***சி****ல பற்றியெறியும் அக்கினிக்கு பெரிதான விசுவாசமே தேவைப்படுகிறது! குறைவான விசுவாசம் அங்கே தோற்றுப்போகும். ஆம், அக்கினி உளையில்தான் நமது ஜெயம் நிலைநாட்டப்பட வேண்டும்!*

*ஒரு மனிதன் தன் துன்ப நேரத்தில் விளங்கச் செய்திடும் பக்தி வைராக்கியத்தை, வேறு எதிலும் அவன் காட்டிட இயலாது! அக்கினி சூளைக்குள் போடப்பட்டவர்கள் கொஞ்சமும் பிசகு- நசலின்றி வெளியே வந்து விட்டார்களே! இதுவே பக்தனின் இரகசியம்! அவனுக்குள் ஒரே ஒரு மாற்றம்தான் நிகழ்ந்தது..... கையில் கட்டப்பட்டு உள்ளே போடப்பட்டார்கள்! வெளியே வரும்போது கட்டு அவிழ்ந்து வந்தார்கள்!! இப்படித்தான் அநேக சமயங்களில், அக்கினி சூளையில் தேவன் தன் மகத்துவத்தை விளங்க பண்ணுகிறார். அவர்கள் பக்கத்தில் சென்று பாருங்கள்.... அவர்கள் சரீரத்தில் காயத்தின் வடு சிறிதேனும் இல்லை! அவர்கள் உடம்பில் கொப்பளங் களும் இல்லை! அவர்கள் முடிகூட கருகவில்லை! அவர்கள் ஆடை பொசுங்கவுமில்லை! நெருப்பின் கருகல் வாசனை கூட அவர்கள் மீது வீசவில்லை! இவ்வாறுதான் எந்த ஒரு உத்தம கிறிஸ்தவனும் அக்கினி சூளையான உபத்திரவங்களைக் கடந்து வெளி வரவேண்டும். கட்டுகள்தான் அவிழ்ந்தன! ஆனால் நெருப்போ அவர்களைத் தொடமுடியவில்லை! இதுவே, கிறிஸ்துவானவர் அடைந்த ஜெயத்திற்கு ஒப்பானதாகும்! ஆம்,* **"அவைகளின் மேல் சிலுவையிலே அவர் வெற்றி சிறந்தார்!"** *(கொலே.2:15) என்பதே அந்த ஜெயகெம்பீரம்!*

*இதுவன்றோ மெய்யான ஜெயம்.... வியாதிப்பட்டாலும் அங்கேயும் ஒரு ஜெயம்! மரித்துக் கொண்டிருந்தாலோ அல்லது மரணமே அடைந்தாலோ அங்கேயும் ஒரு ஜெயம்!*

**எதிரும் புதிருமான சூழ்நிலை மத்தியிலும் "ஒரு வல்லமை" உங்களுக்கு ஜெயம் தரும் என்பதை விசுவாசியுங்கள்.**

*நாம் சென்றடைய வேண்டிய வான் சிகரங்கள் காத்திருக்கின்றன. தேவனை மகிமைப்படுத்தும் அந்த உச்சிக்கு சென்ற பின்பு, திரும்பிப் பாருங்கள்! அப்போது, நீங்கள் கடந்து வந்த பாதையைக் கண்டு வியப் படைந்து, ஜெயத்தின் பாடல்களை உங்கள் நாவு தானாகவே பாடிவிடும்!!*

*இந்த ஒப்பற்ற நிலையில், நம்மை காணும் மற்றவர்கள் "இவன் ஐசுவரியவான் என வியப்பார்கள்! ஆனால் உண்மையில் நாமோ, தரித்திர பாதையில் கடந்து வந்தவர்கள்..... அந்த தரித்திரத்தினால் மற்றவர்களை ஐசுவரியவான்களாய் மாற்றுகின்றவர்கள். இங்கேதான்* **நமது வெற்றியின் இரகசியம்** *புதைந்து கிடக்கிறது! தாழ்விடத்தில்தான் கிறிஸ்து ஜெயம் பெற்றார். மற்றவர்களுக்கு என்னவோ அது இழிவாய் இருக்கலாம்! ஆனால், கிறிஸ்துவைப் போலவே 'அதுவே' நமக்கும் ஜெயம்!*

**ஒரு மனுஷன் எண்ணற்ற உபத்திரவங்களைச் சுமந்து கொண்டு வந்தும் "அவன் இருதயத்தின் கிண்-கிணி மணி ஓசையை" ரீங்காரமாய் நாம் கேட்கும்போது, அந்த காட்சி நம் உள்ளத்தை கொள்ளை கொள்ளாதோ?**

*சோதனை உச்சக் கட்டத்திற்கு சென்ற ஒருவன், முற்றிலும் ஜெயம் பெற்றவனாய் திரும்ப வருவதைக் காண்பது, கண்கொள்ள காட்சியன்றோ! சூடு-பாலைவனத்தையும் ஊடுருவச் சென்ற ஒரு யாத்ரீகனின் உடல் சற்று துவண்டதுபோல் தோன்றினாலும், உடைபடாத அவனது சகிப்புத்தன்மை நமக்கு புத்துணர்வு ஊட்டுகிறது அன்றோ! ஆ, இந்த அதிசயங்கள் அவரது கிருபைக்கே நிலைத்திருக்கும் சாட்சியும், புகழ்ச்சியும் ஆகட்டும்! எண்ணற்ற, வீறுகொண்ட விசுவாச வீரர்களை எழுப்பட்டும்!*

*இந்த மண்ணின் ஆதாரம் யாவும் இழந்தும்!*
*இரைச்சலான சமுத்திரம் போலவே ஆனாலும்!*
*இளைப்பாறுதல் அமைதி கொண்டவன் இவனென்று....*
*இறைவன் பாதுகாத்திடும் அதிசயம் இவனென்று....*
*இயேசுவுக்கு புகழ் சேர்க்கும் மாந்தரில்,*
*நானும் ஒருவன்தானோ?*

*– ஓர் வங்காளதேச மிஷனெரி*

# ட்ரோபின் டிம்மிட்ரோ – பல்கேரியா

(AD 1960)

## கிறிஸ்துவுக்காக வெறிநாய் கிடங்கில் எறியப்பட்ட தீரன்!



பல்கேரியா நாட்டு சட்டபடி, யாருக்கும் கிறிஸ்துநாதரை பிரசங்கிக்க கூடாது என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்த காலம். ஆனால் ட்ரோபின் கிறிஸ்துவின் மீது கொண்ட அன்பினால் ஏவப்பட்டு அநேகருக்கு அந்தரங்கமாய் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து அவர்களை இரட்சிப்பிற்குள் நடத்தினார். தான் பிடிபட்டால் பல்கேரியாவின் கம்யூனிச அதிகாரிகளால் தான் கொடுமைப் படுத்தப்பட்டு, கொல்லப்படுவோம் என்பது ட்ரோபினுக்குத் தெரியும்.

ஒருமுறை, ஒரு கம்யூனிஸ அதிகாரி, கிறிஸ்துவைப் பிறரிடம் சொன்னதிற்காக ஒரு விசுவாசியைப் பிடித்து அடிக்கத் தொடங்கி விட்டார்கள். அப்போது அந்த கம்யூனிஸ அதிகாரி தன் கையில் அடிபட்டுக்கொண்டிருக்கும் கிறிஸ்தவனைப் பார்த்து "இப்போது புரிகிறதா? உன் தேவன் அல்ல, நானே சர்வ வல்லவன். உன்னை கொல்லுவதற்குரிய முழு அதிகாரம் என் கையில் இருக்கிறது" எனக் கூறி இம்சித்தான். அதற்கு அந்த கிறிஸ்தவன், கம்யூனிஸ அதிகாரியைப் பார்த்து "நீங்கள் சொல்வது தவறு! முழு தெய்வ வல்லமையும் என் பக்கத்தில் உள்ளது. நான் மரிக்கும் வரை நீங்கள் என்னை எவ்வளவு துன்புறுத்தினாலும், **நான் உங்களை அன்புகூருவேன்!"** என கெம்பீரமாய் கூறினார். இதை ட்ரோபின் சகோதரன் கேட்டிருந்தார்.

இப்போது ட்ரோபின் கம்யூனிஸ அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்! அவரை இழுத்துச் சென்று ஒரு பெரிய கிடங்கிற்கு பக்கத்தில் நிறுத்தினார்கள். அந்த கிடங்கிற்குள் ஏராளமான வெறி நாய்கள் இருந்தன. அந்த குழிக்குள் அவரை தள்ளுவதற்கு முயற்சித்தபோது, தன்னைக் கொன்றுவிட முயற்சித்த அதிகாரி களுக்காக ஜெபம் செய்தார். அவருடைய உடுப்புகளை அவிழ்த்து நிர்வாணமாக்கி, குழியிலிருந்து குமறிக் கொண்டிருந்த நாய்களுக்கு நடுவில் வேகமாய் தள்ளி விட்டனர்!

அவரைப் பிடித்துத் திண்ணும் நேரத்தில் ஏற்படும் அமைதிக்குப் பதிலாக, நாய்களின் குறைக்கும் குமறல் பன்மடங்கு கூடியது! அந்த ஆழ்கிடங்கை எட்டிப்பார்த்த அதிகாரிகள் ஆச்சரியமுற்றனர். **அங்கு கிடங்கில் ட்ரோபின் முழங்கால்படியிட்டு ஜெபித்துக்கொண்டிருந்தார்.** நாய்களோ அவர் பக்கத்தில் போக முடியாமல், பயந்து வெளியே வருவதற்கு தவ்விக்கொண்டிருந்தன. இதைக்கண்டு அந்த கம்யூனிஸ அதிகாரிகள் அதிர்ச்சியுற்று கிற்ஸதுவின் மீது விசுவாசம் வைத்தார்கள். ட்ரோபின் மீட்கப்பட்டு, மீண்டும் கிறிஸ்துவின் சாட்சிக்காய் உயிர் நீத்தார்!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## ஓ, வாலிபனே! உன் வாலிபம் அபாயம், சிருஷ்டிகரை பற்றிக்கொள்!

ஒரு வாலிப பருவத்தில் தன் எதிர்பாலரோடு வைத்திடும் எவ்வித தனிப்பட்ட நட்பும் ஞானமற்ற செயல் என்பதை, வாலிபர்கள் நிச்சயமாய் அறிந்து கொள்ள வேண்டும். ஒரு வாலிபன் தன் பாலிய மன எழுச்சிகளை ஐஸ்-பெட்டியில் பாதுகாப்பாய் வைப்பதுபோல் வைத்து விட்டு, தன் பாடங்களில் அல்லது தன் வேலையில் மாத்திரமே அதிக கவனம் செலுத்த வேண்டும்! ஒரு வாலிபன், தன் முழு படிப்பை முடிப்பதும், பின்பு ஓர் ஸ்திரமான வேலையில் பணி செய்வதும் வரை திருமணத்திற்கு சிந்தை வைத்திடக் கூடாது! அல்லது ஒரு வாலிபன் குறைந்த பட்சம் 25-வயது முடியும் வரை, ஒரு வாலிப ஸ்திரீ குறைந்தபட்சம் 20-வயது முடியும் வரை திருமணத்தைக் குறித்து யாதொரு சிந்தையும் வைத்திடக் கூடாது!

இவ்வித சாட்சி நிலைக்கு, எவ்வித தராதரத்தையும், எவ்வித சூழ்நிலையையும் ஒரு பொருட்டாய் வைத்திட இயலாது! திருமணத்திற்கு நிச்சயிக்கப்பட்ட எதிர்பாலரோடு, யாதொரு இடத்திற்கும் தனிமையில் செல்லுவதை கண்டிப்பாய் தவிர்க்க வேண்டும். அதுவும் மாலை மயங்கிய அந்தி நேரத்தில், இதுபோன்ற செயல் முற்றிலும் தடைசெய்யப்பட வேண்டும். நமது இந்திய பண்பாட்டிற்கு உட்பட்ட யாராய் இருந்தாலும் இதற்குரிய காரணத்தை மிக எளிதில் விளங்கிக் கொள்வார்கள். துர்பேச்சிற்கு இடம் தரும் யாதொரு காரணத்திற்கும் இடம் கொடாதிருக்க, ஒரு வாலிபன் அல்லது வாலிப ஸ்திரீ கவனம் கொண்டிருக்க வேண்டும்!

ஓ வாலிபரே! இந்த நல்ல வாலிப காலத்தில், உங்கள் சிருஷ்டிகரிடம் வருவதே முழு பாதுகாப்பு. பெற்றோரின் விரல்பிடித்து சென்ற நீங்கள், உங்கள் 'சிருஷ்டிகரின்' விரலைப் பிடித்துக்கொள்ளுங்கள்! நம் பெற்றோருக்கும் முந்தி உள்ள நம் சிருஷ்டிகரே நம் 'பரம தந்தை!'. நீங்கள் பரம தந்தையின் பிள்ளையாகும்படியே, இயேசு உங்களுக்காக உங்களைத்தேடி இரட்சகராய் வந்தார்!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.